7th August 1963]

தாலுகாவிலும், மற்றொன்று தென்னுற்காடு மாவட்டம் கள்ளக் குறிச்சி தாலுகாவிலும் நிறுவ ஏற்பட்டாகியிருக்கிறது. எஞ்சிய இரு ஆலைகள் நிறுவும் விஷயம் பரிசீலிக்கப்படுகிறது.

* 35 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழகத்தில் கரும்பு சர்க்கரை ஆலைகள் எத்தனை உள்ளன ?

(இ) எத்தனை ஆலைகளுக்கு கரும்பு உற்பத்திக்கு மத்திய சர்க்கார் போனஸ் கிடைத்துள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) நமது மாநிலத்தில் பத்து சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன.

(இ) கரும்பு உற்பத்திக்காக சர்க்கரை ஆலைகளுக்கு மத்திய சர்க்கார் போனஸ் எதுவும் கொடுப்பதில்லை.

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Ten sugar factories are in production in this State.

(*b*) The Government of India do not give any bonus to sugar factories for sugarcane production.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தென்னுற்காடு மாவட்டத்தில் விருத்தாஜலத்திற்கு அருகில் பெண்ணுடத்தில் ஆரணி ஷுகர் பாக்டரி என்ற ஸ்தாபனத்தை மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக துவக்க ஏற்பாடு செய்தார்கள். அதற்கு அரசாங் கத்தின் பணம் 15 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொது மக்களிடத்தில் இருந்து 6 லட்சம் வசூல் செய்திருக்கிறார்கள். அதற்கு லைசென்சு வழங்கப்பட்டும் இன்னும் துவக்கப்படாமல் இருக்கிறது. அதை அரசாங்கம் கவனித்து உடனடியாகச் சர்க் கரை ஆலையைத் துவக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள் வார்களா ? அல்லது கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாக வாவது அங்கே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை துவக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பெண்ணுடம் சர்க்கரை ஆலை தனியாருக்கு வழங்கப்பட்டது. அதற்குச் சர்க்கார் பணம் கொடுக்க வில்லை. இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்டு கார்ப்ப ரேஷன் பணம் கொடுத்திருக்கிறார்கள். அதைத் துவக்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது.

SRI R. V. SWAMINATHAN : May I know from the Hon. Minister whether the Government have considered the proposal to start a co-operative sugar factory at Manamadurai and if so, the action taken thereon?

[7th August 1963

THE HON. SRI R. VENKATARAMAN: At the present moment, there is no such proposal under the consideration of the Government. But the Government will consider it if a representation is made and initial steps are taken.

திரு. கே. டி. கோசல்ராம்: திருநெல்வேலியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு உள்ள திட்டம் எல்லாவற்றையும் தயாரித்து அரசாங்கத்திற்கு இரண்டு வருஷத்திற்கு முன்னாலேயே அனுப்பியும் மத்திய சர்க்கார் அதை நிறுத்தி வைத்துவிட்டார்கள் என்ற காரணத்தினால் அது துவங்கப்படவில்லை. அதைத் துவக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இப்பொழுதாவது அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய சர்க்கார் நடுவிலே போதிய அளவு சர்க்கரை உற்பத்தி இருக்கிறது என்று சொல்லி புதிதாக எந்தச் சர்க்கரை ஆலைக்கும் லைசென்சு கொடுப்பதில்லையென்ற முடிவைச் செய்தார்கள். இப்பொழுது அந்த முடிவை மாற்றிக் கொள்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே நிலைமை மாறி புதிதாக சர்க்கரை ஆலை துவக்கப்படுவதற்கு லைசென்சு வழங்குவது என்ற நிலைமை ஏற்பட்டால் நாமும் இதுபற்றி எல்லா முயற்சியும் எடுத்துக் கொள்வோம்.

திரு. சி. கு. சின்னராஜி: சர்க்கரை ஆலைக்குச் செல்லும் கரும்பின் விலையை உயர்த்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எனக்கு ஆலையை வைக்கும் பொறுப்பு தான். கரும்பின் விலையை நிர்ணயிப்பது பற்றி எல்லாம் விவசாய மந்திரியிடம் கேட்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: ராஜபாளையத்தில் சர்க்கரை ஆலை நிறுவது என்ற ப்ரபோசல் மாநில அரசாங்கத்தால் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யப்பட்டதே. அதன் நிலைமை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல மத்திய சர்க்கார் புதியதாகச் சர்க்கரை ஆலை வழங்குவதாக இருந்தால், இவை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு பரிசீலனை செய்து எவற்றுக்கு எல்லாம் லைசென்சு பெறமுடியுமோ, அவ்வளவும் செய்வோம்.

திரு. எம். தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவிலே துவங்குவதற்கு மத்திய சர்க்காரால் இரண்டாவதாக லைசென்சு வழங்கப்பட்ட சர்க்கரை ஆலை இதுவரை துவக்கப்படவில்லை. இனியாவது அதை துவக்குவதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

7th August 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது தனியார் துறையில் கொடுக்கப்பட்ட லைசென்சு. அவர்கள் அந்த ஆலையைத் துவக்குவதற்குச் சரியான முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்பது உண்மைதான். ஆனால் இதுபற்றி சர்க்கார் ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4 சர்க்கரை ஆலைகள் துவக்கப் போவதாக அறிவித்தார்கள். இரண்டு ஆலைகள் துவக்கப்பட்ட இடங்கள் அறிவிக்கப்பட்டன. மற்ற இரண்டும் எங்கே துவக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மத்திய சர்க்கார் புதியதாக இரண்டு ஆலைகள் துவக்கப்படுவதற்கு அனுமதி வழங்காத காரணத்தினால் அந்த இரண்டு ஆலைகளையும் எங்கே துவங்குவது என்பது பற்றி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

SRI R. V. SWAMINATHAN : May I know, Sir, in pursuance of the decision taken at the Industrial Seminar held at Karaikudi recently, whether the Government have considered any proposal to locate a sugar factory in the Ramanathapuram district or in any other place?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have not yet decided about it. A decision will be taken in consultation with the Central Government for starting new factories. Government will consider all the claims and try to get as many factories as possible.

திரு. சா. கணேசன் : சர்க்கரை ஆலைகளுக்கு என்று கரும்பு உற்பத்தி அதிகப்படுவதனால் நெல் உற்பத்தி பாதிக்கப்படும். ஆகையினால் தான் இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற பிராந்தியங்களில் ஏராளமாகப் பனைமரங்கள் இருப்பதனால் அங்கு பனைவெல்லத்தைப் ப்ளீச் செய்து சர்க்கரை உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா? அப்படிச் செய்வது தான் சிறந்தது என்பதையாவது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பனை வெல்லத்தில் இருந்து உண்டாகிற சர்க்கரையை திரு. சா. கணேசன் போன்றவர்கள் தான் விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு) பொதுவாக இன்றைக்குச் சர்க்கரை தேவை என்று சொல்கிறபோது கரும்பாலைச் சர்க்கரை தான் தேவையாக இருக்கிறது. மற்றவிதமான சர்க்கரைக்கு இன்று தேவையில்லை. ஆனால் பனையில் இருந்து வெல்லம், கற்கண்டு செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்திருக்கிறோம்.

திரு. சா. கணேசன் : கனம் அமைச்சர் அவர்கள் சொன்னது போல அல்ல. பனை வெல்லத்திலிருந்து செய்யப்படுகிற சர்க்கரையை காப்பியில் போட்டு உபயோகித்தால் நல்ல ப்ளேவர்

[7th August 1963

இருக்கிறது என்று வெளிநாட்டவர்களே சொல்கிறார்கள். அதுவும் நீலகிரியில் உள்ள வெளிநாட்டவர்கள் பலர் அப்படிச் சொல்கிறார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் எனக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் திரு. சா. கணேசன் அவர்களுக்கு அந்த விவரம் தெரிந்திருப்பதால் அதைப் பலரிடம் எடுத்துச் சொல்லி, தனியார் துறையில் யாராவது பனை வெல்லத்திலிருந்து சர்க்கரை செய்யும் ஆலையை வைக்க முன்வரும் படியாகச் செய்தால் அதை நான் பரிசீலனை செய்கிறேன்.

ர்கனம் சபாநாயகர் : இராமநாதபுரத்தில் பனையில் இருந்து செய்யப்படுகிற சர்க்கரையைச் சாப்பிடுகிறவர்கள் இல்லையென்று சொல்கிறார்கள் போல் இருக்கிறது.

திரு. பி. ராஜகோபால் : தொழிலாளர்களுக்குப் ல்பானஸ் இதுவரை கொடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில சர்க்கரை ஆலைகள் நல்ல முறையில் பணியாற்றி லாபம் பெற்றிருக்கிறது. அந்த ஆலைகளில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த கேள்வி தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுப்பது பற்றியல்ல. சர்க்கரை ஆலைகள் அதிகமாக உற்பத்தி செய்தால் அவர்களுக்கு ரிபேட் கொடுக்கிறார்கள். எக்ஸைஸ் டியூட்டியில் ரிபேட் கொடுக்கப்படுகிறது. அது போனஸ் அல்ல.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, சர்க்கரைக் கட்டுப்பாடு காரணமாக அதிக அளவில் சர்க்கரை வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகிற காரணத்தால் தட்டுப்பாடு ஏற்படுகிறது. ஆகவே, தமிழ் நாட்டில் மேலும் இரண்டு ஆலைகள் நிறுவுவதற்கு மத்திய சர்க்காரை மாகாண சர்க்கார் வலியுறுத்துமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்களுடைய விருப்பம் ரொம்பக் குறைவாக இருக்கிறது. இரண்டு ஆலைகள்தான் கேட்கிறார்கள். சர்க்காரைப் பொறுத்த அளவில் எவ்வளவு அதிகமாக ஆலைகள் வைப்பதற்கு அனுமதி வாங்க முடியுமோ, அந்த அளவுக்கு வாங்க வேண்டுமென்று முயற்சி செய்கிறோம். இப்போது நெருக்கடியில் இரண்டுக்கு மேற்பட்ட ஆலைகள் கேட்கலாம் என்பது இந்த ராஜ்ய சர்க்கார் அபிப்பிராயம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : கண்டசாரி ஷுகர் பாக்டரி வைக்கத் திட்டம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்குத் தனியாகத் திட்டம் தேவை இல்லை. இப்போது கண்டசாரி சர்க்கரை ஆலை அமைக்க யார் வேண்டுமானாலும் முன் வந்து அமைக்கலாம். கனம் சபாநாயகர் அவர்களே, இதைப்பற்றி நான்

7th August 1963]

இன்னும் கொஞ்சம் கூடச் சொல்ல விரும்புகிறேன். சாதாரண மாக, 3, 4 லட்ச ரூபாய் முதலீட்டில், பெரிய சர்க்கரை ஆலையில் உற்பத்தி செய்கிற சர்க்கரையைப் போல் கண்டசாரி சர்க்கரை ஆலையில் தயாரிக்கலாம். அந்த விதமான ஆலை இன்று கோவை யில் நிறுவப் பெற்றிருக்கிறது. இந்த ஆலைகளை அமைப்பதில் பொதுமக்கள் முயற்சி எடுத்துக் கொண்டால் ராஜ்யத்துக்கு நன்மை ஏற்படும்.

திரு. கே. மூக்கையா தேவர்: அமைச்சர் அவர்கள், 'பனஞ் சர்க்கரை நல்ல ருசியோடு இருக்காது, ஒருசிலருக்குத்தான் பிடிக் கும்' என்று சொன்னார்கள். மவுண்ட் ரோடில் கிராமோத்தி யோக்பவன் இருக்கிறது. அங்கு செய்திருக்கிற பண்டங்கள் கரும்பு சர்க்கரையில் செய்ததுபோல் நன்றாக இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் அங்கு போய்ப் பார்வையிட்டு ருசி பார்த்து, பிறகு இராமநாதபுரத்தில் மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக் கூடிய முறையில் இதற்கான ஆலையை அமைக்க முன்வருவார் களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் ருசிபார்க்கவேண்டிய அவசியம் இல்லை. இராமநாதபுரத்திலே இந்த விதமான சர்க்கரை உற்பத்தி செய்வதாக இருந்தால், 'ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்' கீழ் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கரு. சீமைச்சாமி: அமைச்சர் அவர்களுக்குக் கிழக்கு இராமநாதபுரம் பற்றி நன்றாகத் தெரியும். மானாமதுரையில் சர்க்கரை ஆலை ஒன்று ஏற்படும் என்று காரைக்குடியில் நடந்த செமினார் மலரிலே இருக்கிறது. அந்த ஆலையைப் பிற்பட்ட பகுதி யான அங்கே அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அந்த ஆலையை வேறு எங்காவது....

MR. SPEAKER: The hon. Member is not putting the question.

திரு. கரு. சீமைச்சாமி: கேள்விதான் வருகிறது.... (சிரிப்பு)

MR. SPEAKER: No, it cannot be. What is the question?

திரு. கரு. சீமைச்சாமி: அதை மானாமதுரையில் வைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது கனம் அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கும், கனம் அங்கத்தினர் திரு. சீமைச்சாமி அவர்களுக்கும் போட்டியாக இருக்கிறது. (குறுக்கீடு—அவரும் மானாமதுரையில் அமைக்க வேண்டுமென்று தான் சொன்னார்.) நான் முழுவதும் சொல்லும்வரை பொறுத்துக் கொள்ளுங்கள். யார் கேள்வி போடுவது என்பதில்தான் போட்டா போட்டி. அதையேதான் திரு. சுவாமிநாதன் அவர்களும் முதலில் கேட்டார்கள். அதற்கு, சர்க்கார் பரிசீலனை செய்யும் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: சமீபத்தில், ஏழைகள் உபயோ கிக்கக்கூடிய வெல்லத்தின் விலை ஏறிக் கொண்டே வருகிறது. அதனால் ஏழைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஒரு தொழிற்சாலை ஆரம்பித்து வெல்லத்தின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

[7th August 1963

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: வெல்லம் உற்பத்தி செய்வதற்கு தொழிற்சாலை அவசியம் இல்லை. சிறு தொழில் வகையிலே எல்லோரும் வெல்லத்தைக் காய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ப. கோ. முத்துவேலப்ப கவுண்டர்: பனஞ் சர்க்கரையைச் சாப்பிடுவது சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு நல்லது என்று சொல்லுகிறார்கள். **அது உண்மையா?**

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் டாக்டர் அல்ல.

திரு. பி. வி. ஸ்ரீராமுலு: இந்த மாநிலத்திலே 10 சர்க்கரை ஆலைகள் துவக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு ஆலைக்கும் 20, 30 லட்சம் முதலீடு இட்டிருக்கிறார்கள். ஆனால், அண்டை மாநிலத்தில் ஒரு லட்சம் ரூபாய் முதலீட்டுக்குள்ளாக சர்க்கரை ஆலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த முறையில் இந்த மாநிலத்தில் எத்தனை சர்க்கரை ஆலைகள் துவக்க உத்தேசம் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது சில நிமிஷங்களுக்கு முன்புதான் கண்டசாரி சர்க்கரை ஆலையைப் பற்றிக் குறிப்பிட்டேன். அந்த மாதிரி ஆலைகளை அமைக்க 3, 4 லட்சம் ரூபாய்தான் ஆகும். தனியார் துறையினர் முன்வந்துதான் இந்த ஆலைகளை அமைக்க வேண்டும். இதுவரை ஒரு ஆலைதான் நம்முடைய மாநிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. தனியார் வேறு யாரும் இதுவரை முன் வரவில்லை.

சபார்டினேட் ஜட்ஜ் கோர்ட்டு (விருத்தாசலம்).

*36 **கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை:** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு ஜில்லா, கடலூரில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு சபார்டினேட் **(Subordinate)** ஜட்ஜ் கோர்ட்டுகளில் ஒன்றை விருத்தாசலத்தில் நிறுவ உத்தேசமுண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இல்லை.

No, Sir.

திருவள்ளுவருக்கு சிலை அமைத்தல்.

*37 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உலகம் போற்றும் திருவள்ளுவப் பெருந்தகைக்கு அவர் பிறந்த இடம் என்று கருதப்படும் மயிலாப்பூரையொட்டியுள்ள சாந்தோம் கடற்கரையில் பெரியதொரு நினைவுச் சிலையை நிறுவ அரசாங்கம் முன்வருமா?